# இயல் - 5 திருக்கேதாரம்

**சமயக்குறவர்** என்பவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் , சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் ஆகியோர் ஆவர். இவர்கள் சைவ சமயத்தின் தேவாரம் மற்றும் திருவாசகத்தினை எழுதியவர்கள். இவர்களை நால்வர் என்றும் நால்வர் பெருமக்கள் சைவ சமயத்தினர் அழைக்கின்றனர்.




**சுந்தரமூர்த்தி நாயனார்** என்பவர் சைவசமயத்தில் போற்றப்படும் சமயக்குரவர் நால்வரில் ஒருவரும், அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவரும் ஆவார்[1]

இவர் புத்தூரில் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் திருமணம் செய்துகொள்ள

இருந்தபோது சிவபெருமான் கிழவனாக சென்று தடுத்தார்

பின்பு சுந்தரரின் பிறவி நோக்கம் சிவபெருமானை புகழ்ந்து பாடுவது என புரியவைத்தார். இதனை தடுத்தாட்கொள்ளுதல் என சைவர்கள் கூறுகிறார்கள். இவர் இறைவன் மீது பல தலங்களுக்குச் சென்று பாடியுள்ளார்.

இப்பாடல்களை திருப்பாட்டு என்று அழைக்கின்றனர் திருப்பாட்டினை சுந்தரர் தேவாரம் என்றும் அழைப்பர்

திருமணத்தினை தடுத்து சுந்தரரை அழைத்துவந்த சிவபெருமானே பரவையார், சங்கிலியார் என்ற பெண்களை திருமணம் செய்துவைத்தார்[

இவர் வாழ்ந்தது கி. பி. எட்டாம் நூற்றாண்டளவிலாகும்.[1] இவர் பாடிய தேவாரங்கள் 7
ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.[1]

இவர் இயற்றிய திருத்தொண்டத் தொகை என்னும் நூலில் 60 சிவனடியார்கள் பற்றியும், 9 தொகை அடியார்கள் பற்றியும் குறிப்புகள் உள்ளன. இந்நூலின் துணை
கொண்டே சேக்கிழார் பெரியபுராணம் எனும் நூலை இயற்றினார்.

## வாழ்க்கை குறிப்பு:

- இயற்பெயர் = நம்பி ஆரூரர்
- பெற்றோர் = சடையனார், இசைஞானியார்
- ஊர் = திருமுனைப்பாடி நாடு திருநாவலூர்

- மனைவி = பரவையார், சங்கிலியார்
- வாழ்ந்த காலம் = 18 ஆண்டுகள்
- மார்க்கம் = யோகம் என்னும் சக மார்க்கம்
- நெறி = யோகம் அல்லது தோழமை நெறி
- ஆட்கொள்ளட்பாட இடம் = திருவெண்ணெய்நல்லூர்
- இறைவனடி சேர்ந்த இடம் = கைலாயம்
- இவரின் தமிழ் = மிஞ்சு தமிழ்

**படைப்புகள்:**

- 7ஆம் திருமுறை. இதனை “திருப்பாட்டு’ என்பர்.
- திருதொண்டத்தொகை

**வேறு பெயர்:**

**நிகழ்த்தியஅற்புதங்கள்:**

- 12000 பொன்னைமணிமுத்தாற்றில் போட்டு கமலாலயத்தில் எடுத்தார்.
- இவர் பொருட்டு காவிரி ஆறு இரண்டு கூறாகப் பிளந்து நின்றது.
- செங்கல்லைதங்கக்கல்லாகமாற்றினார்.
- வாழ்நாள் முழுவதும் மணக்கோலத்துடன்வாழ்ந்தவர்.
- பரவையார் மீது இவர் கொண்ட காதலுக்கு சிவபெருமான் உதவி புரிந்தார்.
- இரு கண்ணையும்இழந்தவர், காஞ்சியில் ஒரு கண்ணையும்திருவாரூரில் ஒரு கண்ணையும் பெற வைத்தார்.
- முதலை உண்டபாலகனைஉயிரோடுமீட்டார்.

**சிறப்பு:**

இவரின் திருமணத்தன்றுஇறைவனே நேரில் வந்து அடிமை ஓலை காட்டி, சுந்தரர் தனது அடிமை என நிறுவினார்.

- தன்னை அடிமை என்று கூறிய இறைவனைப் “பித்தா” எனக்கோபித்துப் பேசினார். இறைவன் சுந்தரரைஆட்கொண்டப்பின் “பித்தாபிறை சூடி” என்ற பாடலை பாடினார்.
- சேரமான் பெருமாள் நாயனாரோடு “வெள்ளையானை மீது” அமர்ந்து கயிலை சென்றார்.
- மனைவியின் ஊடலை தவிர்க்க இறைவனையேதூதாகஅனுப்பினார்

குறிப்பு:

- இவரை திருமுனைப்பாடி நாட்டை ஆண்டநரசிங்கமுனையர் என்ற மன்னனால் தத்து எடுத்து வளர்க்கப்பட்டவர்.
- இவர் 38000 பதிகங்கள்பாடியதாககூறப்படிகிறது.
- ஆனால் கிடைத்தவை100 மட்டுமே.
- “வித்தகம் பேச வேண்டா விரைந்து பணி செய்ய வேண்டும்” என்று இறைவன் இவரிடம் கூறினார்.